## May 9, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மரின் மொகோக் பகுதியில், சுமார் 11,000 காரட் (2.2 கிலோ) எடையுள்ள மாணிக்க ரத்தினக் கல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

(i) மியான்மரின் வரலாற்றிலேயே எடையின் அடிப்படையில் 2-ஆவது பெரிய மாணிக்கக் கல்லாகக் கருதப்படும் இது, கடந்த மாத பாரம்பரிய புத்தாண்டு கொண்டாட்டங்களுக்குப் பிறகு நடந்த அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளது.

(ii) முன்னதாக கடந்த 1996-இல் 21,450 காரட் எடையுள்ள மாணிக்கக் கல் கண்டெடுக்கப்பட்டாலும், தற்போது கிடைத்துள்ள இந்தக் கல் அதன் நிறம் மற்றும் தரம் காரணமாக மிகவும் மதிப்புமிக்கதாகக் கருதப்படுகிறது.

(iii) மியான்மர் அதிபர் மின் ஆங் லயிங் மற்றும் அவரின் அமைச்சரவை, இந்த மாணிக்கக் கல்லை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உலகின் 90 சதவீத மாணிக்கக் கற்கள் மியான்மரிலிருந்தே கிடைக்கின்றன. மியான்மரின் இந்த ரத்தினத் தொழில் அந்நாட்டு ராணுவ அரசுக்கும், ஆயுதக் குழுக்களுக்கும் முக்கிய வருவாய் ஆதாரமாகத் திகழ்கிறது. இதனால், இதற்கு மனித உரிமை அமைப்புகள் சர்வதேச அளவில் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

2. மத்திய கிழக்கு போர் மற்றும் அதன் பொருளாதார பாதிப்புகளை எதிர்கொள்வது குறித்து, பிலிப்பின்ஸில் நடைபெற்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ஆசியான்) உச்சி மாநாட்டில் தலைவர்கள் தீவிர ஆலோசனை நடத்தினர்.

(i) புருனே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பின்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியத்நாம், கிழக்கு திமோர் ஆகிய 11 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற இந்த மாநாடு, பிலிப்பைன்ஸ் நாட்டின் செபு மாகாணத்தில் எளிமையான முறையில் நடத்தப்பட்டது.

(ii) எரிபொருள் தேவைகளுக்கு மத்திய கிழக்கு நாடுகளையே பெரிதும் நம்பியிருக்கும் தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்துக்கு இப்போர் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள சூழலில், தற்போதைய சவால்களை எதிர்கொள்வதற்கான ஆக்கபூர்வமான விவாதங்களுக்கு மாநாட்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டது.

(iii) எரிபொருள், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அவசரகாலத் திட்டம் குறித்து மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டது. ஆசியான் நாடுகளுக்குள் எரிபொருளைப் பகிர்ந்து கொள்வது, பிராந்திய மின் விநியோகக் கட்டமைப்பை உருவாக்குவது, கச்சா எண்ணெய் இறக்குமதிக்கான புதிய நாடுகளைக் கண்டறிவது போன்ற திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

(iv) மேலும், மின்சார வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் அணுசக்தி உள்ளிட்ட புதிய தொழில் நுட்பங்களை தலைவர்கள் ஆய்வு செய்வதனர்.

(v) மத்திய கிழக்கு போரைத் தாண்டி, தென் சீனக் கடல் விவகாரம், மியான்மர் உள்நாட்டுப் போர் உள்ளிட்ட தென்கிழக்கு ஆசியாவின் முக்கியப் பிரச்னைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

3. நெதர்லாந்து எம்.வி.ஹோண்டியஸ் சொகுசுக் கப்பலில் உள்ள 2 இந்திய மாலுமிகளுக்கு ஹன்டா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

(i) ஆர்ஜென்டினாவில் இருந்து கடந்த ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி பயணத்தை அக்கப்பல் தொடங்கியது. அதில் 150 சுற்றுலா பயணிகளும், 28 நாடுகளைச் சேர்ந்த மாலுமிகளும் இருந்தனர். இதில் பெரும்பாலானோர் செயின்ட் ஹெலீனா தீவில் கடந்த ஏப்ரல் மாதம் 24-ஆம் தேதி தரையிறங்கினர்.

(ii) இந்நிலையில், அந்தக் கப்பலில் இருந்த 5 பேருக்கு ஹன்டா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதுதவிர, ஹன்டா வைரஸ் பாதித்த 2 நெதர்லாந்து நாட்டவர், ஒரு ஜெர்மன் பெண் ஆகிய 3 பேர் உயிரிழந்து விட்டனர். தொற்று பாதித்த 5 பேரில் 2 பேர், கப்பலில் உள்ள இந்திய மாலுமிகள் ஆவர்.

(iii) ஹன்டா வைரஸ் எலிகள் மூலம் பரவக் கூடியது.

(iv) இந்த வைரஸ் பரவலைக் கண்டறியும் முன்பு, கப்பலில் இருந்து 12 நாடுகளைச் சேர்ந்த 29 சுற்றுலா பயணிகள் செயின்ட் ஹெலீனா தீவில் இறங்கிச் சென்று விட்டனர். அவர்கள் மூலம் பிற இடங்களில் வைரஸ் பரவும் அபாயமுள்ளது. ஆதலால்

அவர்களைக் கண்டறியும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

(v) கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு உலகம் முழுவதும் கரோனா வைரஸ் பரவியது. இதில் கோடிக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். மேலும் லட்சக்க ணக்கில் மக்கள் உயிரிழந்தனர். அது போல ஹன்டா வைரஸூம் மனிதர்களிடையே வேகமாக பரவுமா என்பது குறித்து உலக சுகாதார அமைப்பு விளக்கம் அளித்துள்ளது.

(vi) அந்த அமைப்பை சேர்ந்த மூத்த அதிகாரி மரியா வான் கெர்கோவி கூறுகையில், 'இது கரோனா போல பரவாது. இது தொற்று நோய் அல்ல. இது பரவும் தன்மையே முற்றிலும் வித்தியாசமானது. பொதுவாக இது எலிகள் மூலம் பரவுகிறது. எனினும் தொற்று பாதிப்புள்ள மனிதர்களிடமிருந்து இன்னொருவருக்குப் பரவியிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும். ஏற்கெனவே ஹன்டா வைரஸ் பாதித்தோருடன் தொடர்பில் இருப்போருக்கு மட்டும் பரவும்' என்று கூறியுள்ளார்.

4. உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நவீன சாதனத்துடன் கூடிய அதிநவீன ஏவுகணை சோதனை ஒடிஸா மாநிலத்தையொட்டிய கடல் பகுதியில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

(i) 'தாரா' எனப்படும் இந்த சாதனம் பாதையை மாற்றிக் கொண்டு தொலைவில் உள்ள இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் திறனுடையது.

(ii) இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'ஹைதராபாதில் உள்ள இமாரத் ஆராய்ச்சி மையம் மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தின் ஆய்வகங்கள் இணைந்து தயாரித்த 'தாரா' என்ற இந்த நவீன ஆயுத அமைப்பு தரை வழியாக இலக்குகளைத் தாக்கி அழிக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

(iii) இது இலக்கை நோக்கிச் சென்ற பிறகு, பாதையை மாற்றிக் கொள்ள முடியாத சாதாரண ஏவுகணையை மேம்பட்ட வழிகாட்டுதல் அமைப்புகளைக் கொண்டு திசைமாற்றி இலக்கு நோக்கிச் செலுத்தும் திறன்கொண்ட இந்தியாவில் தயாரிக்கப்பட முதல் உள்நாட்டு ஏவுகணை அமைப்பாகும்.

5. புலம்பெயர்வு நிர்வாகத்தில் புலம்பெயர்வோரின் நலன், பாதுகாப்பு, அதிகாரமளித்தலை மையமாகக் கொண்ட ஒரு முழுமையான அணுகுமுறையை இந்தியா பின்பற்றி வருகிறது என்று வெளியுறவுத் துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

(i) அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா.சபை அலுவலகத்தில் நடை பெற்ற இரண்டாவது சர்வதேச புலம்பெயர்வு மறுஆய்வு மன்றத்தின் அமர்வில் பங்கேற்றுப் பேசியபோது இக்கருத்தை அவர் தெரிவித்தார்.

(ii) சர்வதேச புலம்பெயர்வு அமைப்பின் தலைமை இயக்குநர் - ஏமி போப்

6. இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் மீது அமெரிக்கா விதித்த 10 சதவீத சீரான வரி விதிப்பு செல்லாது என்று குறிப்பிட்டு, அதை ரத்து செய்து அமெரிக்க ஃபெடரல் நீதிமன்றம் உத்தரவிட்டது. இது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நிர்வாகத்துக்கு மிகப் பெரிய பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

(i) ஏற்கெனவே, உலக நாடுகள் மீது டிரம்ப் நிர்வாகம் விதித்த பரஸ்பர வரி விதிப்பு செல்லாது என அமெரிக்க உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து ரத்து செய்தது. இந்தத் தீர்ப்பையடுத்து, உலக நாடுகள் மீது அமெரிக்கா விதித்த சீரான 10 சதவீத வரியும் தற்போது செல்லாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

(ii) அமெரிக்க அதிபராக இரண்டாவது முறையாகப் பதவியேற்ற டிரம்ப், இந்தியா உள்பட 60 நாடுகள் அமெரிக்காவுடன் நியாயமற்ற முறையில் வர்த்தக நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதாக குற்றஞ்சாட்டி பரஸ்பர வரி விதிப்பு நடவடிக்கையை மேற்கொண்டார். அதன்படி, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது முதல் கட்டமாக 25 சதவீத வரியை விதித்தார். பின்னர், உக்ரைன் மீது போர் தொடுக்கும் ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய்யை வாங்கி அந்தப் போருக்கு உதவுவதாக குற்றஞ்சாட்டி இந்திய பொருள்கள் மீது கூடுதலாக 25 சதவீத வரியை விதித்தார்.

(iii) இதனால், இரு நாடுகளுக்கும் இடையே உறவு பாதிக்கப்பட்டது. இதற்கிடையே, இந்தியா-அமெரிக்கா இடையே இருதரப்பு - வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்து வந்தது. அதன்மூலம், இரு நாடுகளுக்கிடையே இருதரப்பு இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்துக்கான செயல்திட்டம் அண்மையில் இறுதி செய்யப்பட்டது. இதுகுறித்த அறிவிப்பை அண்மையில் வெளியிட்ட டிரம்ப், இந்திய பொருள்கள் மீதான 25 சதவீத கூடுதல் வரியை ரத்து செய்து உத்தரவிட்டார். மேலும், இந்திய பொருள்கள் மீதான எஞ்சியுள்ள 25 சதவீதவரி 18 சதவீதமாக குறைக்கப்படும் என்றும் அறிவித்தார்.

(iv) இதனிடையே, இந்தியா உள்ளிட்ட 60 நாடுகள் மீது டிரம்ப் நிர்வாகம் பரஸ்பர வரியை விதித்ததற்கு எதிராக அமெரிக்க உச்சநீ திமன்றத்தில் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த மனுக்களை கடந்த பிப்ரவரி 20-ஆம் தேதி விசாரித்த உச்சநீதி மன்றம், உலக நாடுகளின் பொருள்கள் மீது விதிக்கப்பட்ட பரஸ்பர இறக்குமதி வரி உள்பட அவசர அதிகாரங்கள் சட்டத்தின் கீழ், அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த வரிகள் செல்லாது என்று தீர்ப்பளித்தது.

(v) அந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து, உலக நாடுகள் மீது மாற்று வழிகளில் இந்த பரஸ்பர வரி விதிப்பை அமெரிக்கா மேற்கொள்ளும் என்று அறிவித்த டிரம்ப், இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் பொருள்கள் மீது புதிய சீரான 10 சதவீத பரஸ்பர வரியை பிப்ரவரி 24-ஆம் தேதி முதல் 150 நாள்களுக்கு விதித்தார். அதோடு, அமெரிக்க உச்சநீதிமன்ற தீர்ப்பு காரணமாக நாட்டின் பொருளாதார சரிவு தொடர்வதால் உலக நாடுகள் மீதான 10 சதவீத பரஸ்பர வரி 15 சதவீதமாக உயர்த்தப்படும். அவ்வாறு, உலக நாடுகள் மீது உயர்த்தப்பட்ட புதிய வரிகள் தொடர்பான விவரத்தை அமெரிக்க நிர்வாகம் அடுத்த சில மாதங்களில் வெளியிடும் என்று டிரம்ப் அறிவித்தார்.

(vi) அதோடு, இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட வர்த்தக கூட்டுறவு நாடுகளின் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் அமெரிக்க உற்பத்தியை எந்த அளவுக்கு பாதித்துள்ளது என்பதைக் கண்டறியும் நோக்கில் அமெரிக்க வர்த்தகச் சட்டம் 1974-இன் பிரிவு 301-இன் கீழ் புதிய விசாரணையை அமெரிக்கா மேற்கொள்கிறது.

(vii) இந்த நிலையில், உலக நாடுகள் மீதான இந்த 10 சதவீத சீரான பரஸ்பர வரி விதிப்பை எதிர்த்து பர்லாப் அண்ட் பேரல் என்ற மசாலா நிறுவனம் மற்றும் பேசிக் ஃபன் என்ற பொம்மை நிறுவனம் சார்பில் சர்வதேச வர்த்தகத்துக்கான நீதிமன்றத்தில் வழக்குதொடரப்பட்டது.

(viii) இந்த வழக்கு நீதிபதிகள் மார்க் ஏ. பார்நெட், க்ளாரியே ஆர். கெல்லி, டிமோதி சி.ஸ்டான்சு ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் இருமாறு பட்டதீர்ப்பை அளித்தனர்.

(ix) நீதிபதிகள் மார்க் பார்நெட், க்ளாரியே கெல்லி ஆகியோர் அளித்த பெரும்பான்மை தீர்ப்பில், 'உலக நாடுகள் மீது 10 சதவீத சுங்க வரியை விதிப்பதற்காக அதிபர் டிரம்ப் பயன்படுத்திய 1974- ஆம் ஆண்டு வர்த்தகச் சட்டத்தின் விதிகள், நிலுவைத் தொகையைச் செலுத்துவதில் நெருக்கடி ஏற்பட்டால் மட்டுமே பயன்படுத்த முடியும். அதாவது, வர்த்தகம் தொடர்பான அனைத்து துணைக் கணக்குகளும் சமநிலையில் இல்லாத பட்சத்தில், தொகையைச் செலுத்துவதில் உள்ள பற்றாக்குறையைக் கண்டறிந்து அதிபர் இதுபோன்ற நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். அப்போது, நாடாளுமன்றம் தனக்குள்ள வரம்பற்ற சுங்கவரி அதிகாரத்தை அதிபருக்கு வழங்கும்.

(x) ஆனால், உலக நாடுகளின் இறக்குமதி மீது 10 சதவீத கூடுதல் வரியை சட்டபூர்வமாக அறிவிப்பதற்கு, சட்டத்தில் தேவைப்படும் இந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதை நிரூபிக்க அதிபர் டிரம்ப்பின் பிரகடனம் தவறிவிட்டது. எனவே, உலக நாடுகளின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட 10 சதவீத புதிய சீரான பரஸ்பர வரி விதிப்பு செல்லாது' என்று உத்தரவிட்டனர்.

7. இந்திய கச்சா எண்ணெய் நிறுவனங்களுக்கு கடந்த மார்ச் மாதத்தில் இருந்து ரூ.30,000 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

(i) ஈரான் மற்றும் அமெரிக்கா, இஸ்ரேல் இடையே ஏற்பட்ட மோதலால் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியது. இதனால் அவ்வழியே கச்சா எண்ணெய் உள்பட எரிபொருள் ஏற்றிச் செல்லும் வணிகக் கப்பல்கள் பயணிப்பது தடை பட்டது. சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை பன்மடங்கு அதிகரித்தது.

(ii) ஆனால் இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாக பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்த்தப்படவில்லை. மாறாக இந்திய எண்ணெய் நிறுவனம், பாரதபெட்ரோலிய நிறுவனம் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனத்துக்கு நஷ்டம் ஏற்படுவதை தவிர்க்க பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால்வரியை மத்திய கலால் வரியை மத்திய அரசு குறைத்தது. இருப்பினும், பெட்ரோல் மற்றும் டீசல் மீதான சில்லறை விலையை மத்திய அரசு அதிகரிக்கவில்லை. இதனால் கடந்த மார்ச் மாதம் முதல் தற்போது வரை இந்திய கச்சா எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.30,000 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஒருவேளை பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால்வரியை மத்திய அரசு குறைத் திருக்காவிட்டால் எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.62,500 கோடி நஷ்டம் ஏற்பட்டிருக்கக் கூடும்.

(iii) கடந்த பிப்ரவரி 28-ஆம் தேதி ஈரான் மற்றும் அமெரிக்கா, இஸ்ரேல் இடையே மோதல் தொடங்கியபோது ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 72 அமெரிக்க டாலர்களாக இருந்த நிலையில், தற்போது அது 144 அமெரிக்க டாலர்களாக உயர்ந்துள்ளது.

8. ஆட்டிசம் (Autism) குறித்த பகுப்பாய்வு: இக்குழந்தைகளின் ஆற்றலையும், அவர்களுக்கு ஆதரவளிக்கத் தேவையான

கட்டமைப்பு ரீதியான மாற்றங்களையும் முன்னிலைப்படுத்துதல்.

(i) 10 வயதுக்குட்பட்ட ஆட்டிசம் பாதித்த நான்கு குழந்தைகள், தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் சென்று மீண்டும் திரும்பும் வகையில், சுமார் 107 கிலோமீட்டர் (58 கடல் மைல்கள்) தூரத்தை 18 மணி நேரம் 12 நிமிடங்களில் நீந்திக் கடந்து உலக சாதனை படைத்துள்ளனர். முறையான பயிற்சியளிக்கப்பட்டால், இக்குழந்தைகளும் உலகளாவிய சிறப்பை எட்ட முடியும் என்பதை இது நிரூபிக்கிறது.

(ii) ஆட்டிசம் என்பது ஒரு மனநோய் அல்ல; மாறாக, மூளை வளர்ச்சியில் ஏற்படும் வேறுபாடுகளால் உண்டாகும் ஒரு நரம்பியல் குறைபாடாகும்.

- சவால்களும் எதார்த்தங்களும்:
- ஆட்டிசம் பாதித்த நபர்களில் 40% பேருக்குப் பேசும் திறன் இருப்பதில்லை.
- முறையான தொழிற்பயிற்சி இல்லாத காரணத்தினால், ஆட்டிசம் பாதித்த பெரியவர்களில் 75% பேர் வேலையின்றி உள்ளனர்.
- இக்குறைபாட்டை முழுமையாக "குணப்படுத்த" இயலாவிட்டாலும், முறையான மருத்துவச் சிகிச்சை, பேச்சுப் பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சி ஆகியவை அவர்கள் இயல்பான வாழ்க்கையை வாழ உதவக்கூடும்.
- சில குழந்தைகளிடம் "சாவண்ட் சிண்ட்ரோம்" (Savant Syndrome) எனும் நிலை காணப்படுகிறது; இக்குழந்தைகள் சராசரி குழந்தைகளை விடப் பன்மடங்கு சிறப்பான நினைவாற்றல், ஒருமுகப்படுத்தும் திறன் மற்றும் இசை அல்லது ஓவியம் போன்ற கலைகளில் அபாரத் திறமைகளைக் கொண்டிருப்பார்கள்.
- ஆட்டிசம் பாதித்தவராக அதிகாரப்பூர்வமாக முதன்முதலில் கண்டறியப்பட்ட டொனால்ட் டிரிப்லெட் (Donald Triplett) என்பவர், ஒரு வங்கியில் பணிபுரிந்தார்; சிறந்த இசைக்கலைஞராகவும் திகழ்ந்த அவர், தனது 89-வது வயது வரை ஒரு நிறைவான, இயல்பான வாழ்க்கையை வாழ்ந்தார்.

(iii) இந்தியா மற்றும் உலகம் முழுவதும் இதன் பரவல் நிலை:

- உலக மக்கள் தொகையில் சுமார் 1% பேர் (ஏறத்தாழ 7.5 கோடி மக்கள்) ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- இந்தியாவில், ஒவ்வொரு 68 குழந்தைகளிலும் ஒரு குழந்தைக்கு ஆட்டிசம் பாதிப்பு இருப்பதாகக் கண்டறியப்படுகிறது.
- 2020-ஆம் ஆண்டிலிருந்து, ஆட்டிசம் பாதிப்பு இருப்பதாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 128% அதிகரித்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

(iv) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அரசுக்கான பரிந்துரைகள்:

- "அறிவுசார் குறைபாடுகள் மற்றும் ஆட்டிசம் பாதித்த குழந்தைகளும் பள்ளியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்" என்ற வாசகம் அடங்கிய அறிவிப்புப் பலகைகளை, அனைத்து அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் கட்டாயமாகப் பொருத்துமாறு மாநிலத் தொடக்கக் கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது. மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவங்களிலும் இத்தகவல் இடம்பெற வேண்டும்.
- பள்ளிகளில் ஆட்டிசம் பாதித்த குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளும் ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகளை வழங்குமாறு அரசுக்கு வலியுறுத்தப்படுகிறது.
- ஆட்டிசம் மற்றும் அறிவுசார் குறைபாடுகள் உள்ள நபர்களுக்கு, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகக் காத்திருக்கும் வரிசையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று தமிழகச் சுகாதாரத் துறை சமீபத்தில் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது.
- அரசு அல்லது தனியார் துறைகளில் பணிபுரியும் பெற்றோர்கள் (குறிப்பாகத் தனிப் பெற்றோர்கள்), தங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு உதவும் வகையில், அவர்களுக்குச் சிறப்பு விடுப்புகள் மற்றும் சலுகைகளை வழங்குவதற்கான சட்ட விதிகள் உருவாக்கப்பட வேண்டும்.
- பல தன்னார்வ நிறுவனங்கள் பராமரிப்பு இல்லங்களை நடத்தி வந்தாலும், பெற்றோரை இழந்த ஆட்டிசம் பாதித்த குழந்தைகளுக்கு நீண்டகாலப் பராமரிப்பை வழங்குவதற்காக, அரசு நடத்தும் இல்லங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆட்டிசம் தொடர்பான சவால்களைச் சமாளிப்பதற்கு, நலத்திட்டங்களைச் செயல்திறனுடன் செயல்படுத்துவதும், ஒரு ஆதரவான சமூக மனப்பான்மையும் இன்றியமையாதவையாகும்.

9. தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் போதைப்பொருள் மற்றும் மது அடிமைத்தனம் குறித்த ஆய்வு

(i) அரசியல் மற்றும் சமூகச் சூழல்:

அண்மையில் நடைபெற்ற 17-வது தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின்போது, வளர்ந்து வரும் "போதைப்பொருள் கலாச்சாரம்" குறித்த விவகாரம் ஒரு முக்கிய விவாதப் பொருளாக அமைந்தது. மரபுரீதியாகக் கள் மற்றும் சாராயம் ஆகியவற்றுடன் மட்டுமே நின்றுவந்த போதைப்பொருள் பயன்பாடு, பிற்காலத்தில் வட இந்தியா மற்றும் வெளிநாடுகளுடனான வர்த்தகத்தின் வாயிலாகக் கஞ்சா மற்றும் அபின் போன்ற வீரியமிக்க போதைப்பொருட்களின் அறிமுகத்தால் விரிவடைந்தது.

(ii) பயன்பாட்டின் பரிணாம வளர்ச்சி:

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் தொழிலாளர்கள் மத்தியில் கஞ்சா மற்றும் அபின் ஆகியவற்றின் மருத்துவத் தேவை சாராத பயன்பாடு தொடங்கியது; இது படிப்படியாகத் தமிழ் சமூகத்திற்குள்ளும் ஊடுருவியது.

- தமிழ்நாட்டில் மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட காலவரிசை:
- 1937: சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு முதன்முதலில் ஒரு சோதனை முயற்சியாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- இரண்டாம் உலகப்போர் காலம்: அரசின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் மதுவிலக்குத் தளர்வு செய்யப்பட்டது.
- 1948: சென்னை மாகாணம் (தற்போதைய தமிழ்நாடு) முழுவதும் முழுமையான மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது.
- 1971–1974: பொருளாதார நெருக்கடியின் காரணமாக மதுவிலக்கு விலக்கிக்கொள்ளப்பட்டது; அதைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் அரசியல் காரணங்களுக்காகப் பலமுறை மீண்டும் அமல்படுத்தப்படுவதும், விலக்கிக்கொள்ளப்படுவதுமாக இருந்தது.

(iii) தற்போதைய அமைப்பின் தாக்கம்:

கடந்த 25 ஆண்டுகளாக மதுபானம் கட்டுப்பாடின்றி விற்பனை செய்யப்பட்டு வருவது, குடும்பச் சச்சரவுகள், கடன் சுமையால் ஏற்படும் தற்கொலைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பு உள்ளிட்ட கடுமையான சமூகச் சீர்கேடுகளுக்கு வழிவகுத்துள்ளது.

- 2016 சட்டமன்றத் தேர்தலின்போது டாஸ்மாக் (TASMAC) கடைகளை படிப்படியாக மூடுவதாக வாக்குறுதிகள் அளிக்கப்பட்டபோதிலும், எந்தவொரு அரசும் அதனை நிரந்தரமாகச் செயல்படுத்தவில்லை; ஏனெனில், இக்கடைகள் ஆண்டுதோறும் சுமார் ₹50,000 கோடி வருவாயை ஈட்டித் தருகின்றன.
- தற்போது போதைப்பொருட்கள் "டார்க் வெப்" (Dark Web) போன்ற சட்டவிரோத இணையத் தளங்கள் வாயிலாக விற்பனை செய்யப்படுகின்றன; மேலும், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மாணவர் விடுதிகளுக்கு மிக அருகிலேயே இவை எளிதாகக் கிடைக்கக்கூடிய சூழல் நிலவுகிறது.
- மாநிலத்தில் உள்ள லட்சக்கணக்கான மக்களுக்குப் போதை அடிமைத்தனத்திலிருந்து மீள்வதற்கான சிகிச்சை மற்றும் மறுவாழ்வுச் சேவைகள் தேவைப்படும் நிலையில், தமிழ்நாட்டில் தற்போது ஆண்டுக்குச் சில ஆயிரம் நபர்களுக்கு மட்டுமே சிகிச்சை அளிப்பதற்கான கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

(iv) தமிழ்நாட்டில் போதை அடிமைத்தனத்தின் பரவல் நிலை

- "ஆபரேஷன் கஞ்சா ஹன்ட்" (Operation Ganja Hunt - கஞ்சா வேட்டை நடவடிக்கை) என்ற சிறப்பு நடவடிக்கையின்போது (டிசம்பர் 2021 – 2022), காவல்துறையினர் 75,000 கிலோ கஞ்சாவைப் பறிமுதல் செய்தனர். அபின், ஹெராயின் மற்றும் செயற்கை போதைப்பொருட்கள் ஆகியவற்றின் பறிமுதலும் கணிசமாக அதிகரித்துள்ளது.
- இளைஞர்கள் குறித்த புள்ளிவிவரங்கள் (2025-ஆம் ஆண்டைய ஆய்வு):
- மூன்று மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின்படி, பள்ளி மாணவர்களில் 9 சதவீதம் பேர் கஞ்சா மற்றும் பிற போதைப்பொருட்களைப் பயன்படுத்துவது தெரியவந்துள்ளது.
- சென்னையில், 10 முதல் 19 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், 30% பேர் மது அருந்துவதாகவும், 34% பேர் குறைந்தது ஒரு வகையான போதைப்பொருளையாவது (மது, கஞ்சா போன்றவை) பயன்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.
- பெரியவர்களிடையே மதுப் பயன்பாடு:
- 70 லட்சம் ஆண்கள் தினமும் மது அருந்துகின்றனர்.
- 22 லட்சம் ஆண்கள் வாரத்திற்கு 3 முதல் 4 முறை மது அருந்துகின்றனர்.

- மது தொடர்பான பிரச்சினைகளுக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும் அடிமைகளாக 37 லட்சம் பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
- பிற போதைப்பொருட்கள்: ஏறக்குறைய 7.5 லட்சம் பேர் கஞ்சா, அபின் அல்லது செயற்கை போதைப்பொருட்களைப் பயன்படுத்துகின்றனர்; இவர்களில் 1.5 லட்சம் பேர் தீவிர போதை அடிமைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(v) உலகளாவிய நிலை

- பல நாடுகள் போதைப்பொருள் கலாச்சாரத்தை நாட்டின் அழிவுக்கான ஒரு வழியாக அங்கீகரித்து, அதனை ஒழிப்பதில் வெற்றிகரமாகச் செயல்பட்டுள்ளன. ஐஸ்லாந்து, போர்ச்சுகல், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகியவை இத்தகைய வெற்றிகரமான முன்னுதாரணங்களாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

(vi) முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்வுகள்

இப்பிரச்சினையை எதிர்கொள்ள, பலமுனை அணுகுமுறை அவசியமாகும்:

- போதைப்பொருட்களை விற்பனை செய்வோருக்குக் கடுமையான சட்டரீதியான விளைவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல்.
- போதை அடிமைகளுக்கு விரைவான மற்றும் எளிதில் அணுகக்கூடிய மீட்புச் சிகிச்சையை அரசு வழங்க வேண்டும்.
- பள்ளி அளவிலேயே போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வுத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- போதைக்கு அடிமையாகும் நிலையிலிருந்து இளைஞர்களைத் திசைதிருப்பும் வகையில், அவர்களை விளையாட்டு மற்றும் பல்வேறு கலைகளில் ஈடுபட ஊக்குவித்தல்.
- போதைப்பொருட்களைப் பயன்படுத்தும் திசையில் நகரக்கூடிய மாணவர்களைக் கண்காணித்து வழிகாட்ட, ஆசிரியர்களும் பெற்றோர்களும் இணைந்து செயல்பட வேண்டும்